**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 98/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **வீராஞ்சநெய்லு** | **Caste** | : | |
| **Father's Name** | : | **ராமலு** | **Calling** | : | **பச்சைமிளகாய் வியாபாரம்** |
| **Village** | : | **சிலுக்கலூாரிபேட்டா** | **Religion** | : | |
| **Taluk** | : | **குண்டுர் (Dist) ஆந்திரா** | **Age** | : | **65** |
| | | | **Dated** | : | **28.04.2025** |

**28.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திரு. வீராஞ்சநெய்லு** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது ஆந்திரா மாநிலம் சிலுக்கலூாரிபேட்டா, குண்டுர் மாவட்டத்தில் குடியிருந்து மாட்டுரில் உள்ள பிரகாசம் காய்கறி கமிஷன் மண்டியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 21.01.2025 ம் தேதி மாலை 5 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள RPK காய்கறி கமிஷன் மண்டியில் எங்களது நிறுவனத்திற்கு வரவேண்டிய 16 லட்சம் பணத்தை வாங்கிக் கொண்டு Green கலர் கை பேக்கில் பணத்தை வைத்துக் கொண்டு, பஸ்சில் பாவூர் சத்திரம் வந்து பாவூர் சத்திரத்திலிருந்து தினசரி ஒட்டன்சத்திரத்திற்கு காய்கறி ஏற்றிக் கொண்டு வரும் ஈச்சர் நான்குசக்கர வாகனத்தில் நானும், டிரைவரும் ஒட்டன்சத்திரம் வந்து சேர்ந்தோம். காலை 4.00 மணிக்கு வந்து காய்கறி

மண்டியில் வேலை செய்துவிட்டு தனியார் விடுதியில் தங்கினேன். பணத்தை பாதுகாப்பாக பழக்கமான காய்கறி கமிஷன் மண்டியில் கொடுத்து வைத்திருந்தேன். பின்பு பணப்பையை பெற்றுக் கொண்டு ஒட்டன்சத்திரத்திலிருந்து 23ம் தேதி மாலை 6.00மணிக்கு பழனி– திருச்சி பஸ்சில் ஏறி பணப்பையை நான் அமர்ந்திருந்த சீட்டின் மேல் உள்ள லக்கேஷ் ஸ்டேண்டில் வைத்துவிட்டேன். இரவு 7.15– 7.30 மணிக்குள் திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்குள் பஸ் வந்தது. பஸ்சில் டிரைவர், கண்டைக்டர் டீ சாப்பிட இறங்கிவிட்டதால் நானும் சிகரெட்குடிப்பதற்காக பஸ்சை விட்டு இறங்கி பஸ்சின் அருகில் உள்ள கடையில் சிகரெட் குடித்துவிட்டு பஸ்சில் ஏறி நான் வைத்திருந்த பணப்பையை பார்த்தபோது பணப்பை காணாமல் போய் இருந்தது. பஸ்சில் அமர்ந்திருந்த 2,3 நபர்களிடம் பணப்பை குறித்து கேட்டேன், அவர்கள் தெரியாது என்று சொன்னார்கள். நான் பஸ்சை விட்டு கீழே இறங்கி அக்கம் பக்கம் யாரும் பணப்பையுடன் போகிறார்களா என்று பார்த்தேன். யாரும் தென்படவில்லை. நான் உடனடியாக எனது மொபைல் போனில் இருந்து எனது ஓனர் வெங்கடரமணாவிற்கு தகவல் சொன்னேன். அவர் என்னை உடனடியாக ஆந்திரா கிளம்பி வருமாறும், பின்பு இருவரும் திண்டுக்கல் சென்று புகார் செய்யலாம் என்று சொன்னார். நான் இங்கிருந்து கிளம்பி ஆந்திரா சென்றேன். பின்பு ஆந்திராவில் இருந்து நானும், எனது ஓனர் வெங்கடரமணாவும் ஆந்திராவில் கிளம்பி திண்டுக்கல் வந்து எனது ஓனரின் நண்பர் சதீஸ்குமார் என்பவரின் மூலம் எனக்கு தமிழ் எழுதத் தெரியாததால் நான் சொல்லச்சொல்ல சதீஸ்குமார் புகார் மனு எழுதி நான் கையொப்பம் செய்து காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்க 26.01.2025ம் தேதி காலை 6.00 மணிக்கு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகாரில் உள்ள சங்கதிகளை சதீஸ்குமார் படித்து என்னிடம் சொன்னார். (**புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) நாங்கள் திண்டுக்கல் பஸ்டாண்டு அருகில் உள்ள லாட்ஜில் தங்கியிருந்தோம். மறுநாள் போலீஸ் ஸ்டேசனில் இருந்து மாலை வேளையில் பணம் கிடைத்துவிட்டதாக தகவல் சொல்லி ஸ்டேசனுக்கு வரச்சொன்னார்கள். நானும் எனது ஓனரும் காவல் நிலையம் சென்றோம். எனது பணப்பையை திருடிய நபர்களை போலீசார்கள் காண்பித்தார்கள். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகள் தான் இரண்டு ஆண்களும், ஒரு பெண். மூவரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளனர். (சாட்சி கையை நீட்டி எதிரிகளை அடையாளம் காட்டினார்.) எனது பணப்பையை திருடியதாக போலீசார் அடையாளம் காட்டினார்கள். ரூ.10,33,000/–த்தை போலீசார் எதிரிகளிடமிருந்து கைப்பற்றியதாக சொன்னார்கள். பணத்தை நீதிமன்றத்தின் மூலம் மனுதாக்கல் செய்து பெற்றுக் கொண்டோம். (என்னிடம் காட்டப்படும் போட்டோக்கள் (**வரிசை 1 முதல் 21 எண்ணிக்கை) சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் போதிய வாய்ப்பு வழங்கி குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

-

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

(Sd). C. Dinesh Kumar

Judicial Magistrate No.II

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No. 98/2025**

**Prosecution Witness :2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சதீஸ்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **தங்கராஜ்** | **Calling** | : | **டீ கடை** |
| **Village** | : | **செட்டிநாயக்கன்பட்டி** | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **34** |
| | | | **Dated** | : | **28.04.2025** |

**28.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திரு. சதீஸ்குமார்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் செட்டிநாயக்கன்பட்டியில் குடியிருந்து MVM கல்லூரி அருகே டீ கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்குத் தெரியுமா என்றால் கடந்த 26.01.2025 ம் தேதி நான் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம் அருகில் உள்ள பூ மார்க்கெட்டில் மாலை வாங்குவதற்காக காலையில் சென்றபோது அங்கு அ.சா.1 மற்றும் அவருடன் 4,5 நபர்கள் இருந்தார்கள். அதில் ஒரு நபரிடம் அ.சா.1 வேலை செய்வதாகவும், அ.சா.1 திண்டுக்கலுக்கு வந்தபோது பணத்தை தொலைத்துவிட்டதாகவும், அவர்களுக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியாது என்பதால் என்னை அவர் சொல்லச் சொல்ல புகார் மனு எழுதித் தருமாறு கேட்டார்கள். நான் அவர்களுக்கு

உதவி செய்தேன். அவர்கள் சொல்லச் சொல்ல தமிழில் எழுதி புகாரைப் படித்துக் காட்டி அவர்களிடம் கையொப்பம் பெற்று காவல் நிலையம் சென்று அங்கு பணியில் இருந்த காவலரிடம் புகார் மனுவை கொடுத்தோம். புகாரில் நானும் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். புகாரில் சாட்சி எனும் இடத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. (**சாட்சி கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) காணாமல் போன பணப்பையில் இருந்த பணம் ரூ.16 லட்சம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி கள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் போதிய வாய்ப்பு வழங்கி குறுக்கு விசாரணை இல்லை என்றார்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

(Sd). C. Dinesh Kumar

Judicial Magistrate No.II
Dindigul.